## 9. விருந்தோம்பல்

*81.* *இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு*

**இல் வாழ்க்கை வாழ்வதெல்லாம்**
**இன்முகத்தோடு விருந்தினரை வரவேற்று**
**இனிய உபசரிப்பும் உதவியும் செய்வதற்கே !**

*82.* *விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா*
*மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று*

**வந்த விருந்தினர் வெளியே இருக்க**
**வரமாகக் கிடைத்த – சாகாமல் இருப்பதற்கான**
**வலிய மருந்தாக இருந்தாலும்**
**வந்தவருக்குத் தராமல் தனித்து உண்பது விரும்பத்தக்கதல்ல !**

*83.* *வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை*
*பருவந்து பாழ்படுதல் இன்று*

**நாள்தோறும் இல்லம் நோக்கி**
**நாடி வருகின்ற விருந்தினரை**
**நாவசைத்து வரவேற்று மகிழ்பவரின் வாழ்க்கை**
**நாதியற்றுத் துன்பம் அடையப் போவதில்லை !**

*84.* *அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து*
*நல்விருந் தோம்புவான் இல்*

**முக மலர்ச்சியால் அக மகிழ்ச்சியைக் காட்டி**
**முத்தாய்ப்பாய் விருந்தினரை வரவேற்பவர் வீட்டில்**
**முழு மகிழ்வோடு தங்குவாள் திருமகள் !**

*85.* *வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி*
*மிச்சில் மிசைவான் புலம்*

**விருந்தினர்க்கு முதலில் உணவளித்து**
**விருந்திற்குப் பின் மிஞ்சியதை**
**விருப்பமுடன் உண்டு வாழும் பண்பாளனின் நிலத்தில்**
**விதைக்காமலே விளைச்சல் விளையும் !**

86. *செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*
*நல்விருந்து வானத் தவர்க்கு*

**வந்த விருந்தினரைப் போற்றி – இனி**
**வரப் போகின்ற விருந்தினரை எதிர்பார்த்து**
**வரவேற்கக் காத்திருப்பவன்**
**வணங்குதலுக்குரிய வானத்துத் தேவர்களுக்கும் சிறந்த விருந்தினனே!**

87. *இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்*
*துணைத்துணை வேள்விப் பயன்*

**விருந்தோம்பலுக்கு அளவுகோல் இல்லை !**
**விருந்தினரின் சிறப்பை எண்ணிப்பார்த்து**
**விருந்தோம்பலை வேள்வியாகக் கருதினால்**
**விளையும் அறத்தின் பயன் !**

88. *பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி*
*வேள்வி தலைப்படா தார்*

**விருந்தோம்பல் எனும் வேள்வியில் ஈடுபடாதார்**
**வியத்தகு முறையில் சேர்த்த செல்வம்**
**விலகி ஒழிந்த பின் விக்கித்து**
**விருந்தோம்பலுக்குப் பயன்படாமல் வீணானது என வருந்துவார்கள்!**

89. *உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா*
*மடமை மடவார்கண் உண்டு*

**இருந்தும் இல்லாதவர் என்பது**
**இன்விருந்து ஓம்பாதவர் !**
**இத்தகைய மடமை அறியாதவரிடத்தே**
**இருக்குமாம் !**

90. *மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து*

**முகர்ந்தவுடன் வாடி விடும் அனிச்சம் பூ போல்**
**முகங்கோணி விருந்தினரை வரவேற்றாலே**
**முற்றாக வாடிடுவர் விருந்தினர் – விருந்தும்**
**முறிந்து கெடும் !**